## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு -2013

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் அட்டுறு எண்ணக்கருவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் மாத்திரம் விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராத மற்றும் 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடியாத செயற்பாடுகளுக்கான ரூபா 4,832,800 தொகையான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் அலுவலக உபகரணம் ஆகிய நிலையான சொத்துகளுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 843,895 ஆலும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பெறுமானத்தேய்வு, கணனி மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ஆகிய இரண்டு பெறுமானத்தேய்வு விடயங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 1,194,568 மற்றும் ரூபா 915,991 வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எரிபொருள் ஒழுங்குபடுத்தலுக்காக ஆணைக்குழுவுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் விலகல் பதிவுக் கட்டணங்கள் அரையாண்டிற்காக 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய போதிலும், 03 நிறுவனங்களிலிருந்து முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக முறையே ரூபா 487,743 தொகையும் ரூபா 1,119,122 தொகையும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிறப்பாக்கி அனுமதிப்பத்திரதாரிகளுக்கு வழங்கப்படுகின்ற பிறப்பாக்கி அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் குறித்த ஆண்டின் யூன் 30 இல் அல்லது அதற்கு முன்னர் முறைமைக்கு மின்சார வழங்கலை ஆரம்பித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வருடாந்த ஒழுங்குபடுத்துதல் கட்டணங்களை அனுமதிப்பத்திரதாரிகளால் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 252,000 ஆன ஒழுங்குபடுத்துதல் கட்டணங்கள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2008 ஏப்ரல் 24 ஆம் திகதிய 431 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | விமானப் பிரயாணங்களுக்காக அரசிற்கு சொந்தமான விமானக் கம்பனிகளிலிருந்து விமானப் பிரயாண சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் ஒருவரால் தனியார் விமானக் கம்பனியொன்றிடமிருந்து சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2000 சனவரி 31 ஆம் திகதிய பிஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பந்தி | முன்னைய வருடங்களைப் போன்றே மீளாய்வாண்டிலும் உத்தியோகத்தர்களால் செலுத்த வேண்டிய ரூபா 843,153 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழு நிதியங்களின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 9,482,122 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 29,967,560 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 20,485,438 தொகையான குறைவினைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்காக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விலகல் பதிவுக் கட்டண வருமானம் ரூபா 4,225,248 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஆளுக்குரிய சம்பளங்கள், வெளிநாடு மற்றும் உள்நாட்டு பயிற்சி செலவினங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் முறையே ரூபா

3,671,380 தொகையாலும் ரூபா 3,562,380 ஆலும் ரூபா 3,997,574 தொகையாலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆணைக்குழுவின் நடைமுறை விகிதம் 13:1 ஆகவும் முன்னைய ஆண்டின் விகிதம் 10:1 ஆக இருந்தமையால் நடைமுறைப் பொறுப்பொன்றை தீர்வு செய்வதற்காக கூடுதலான நடைமுறைச் சொத்துக்கள் பேணப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டதுடன், மொத்த நடைமுறைச் சொத்துக்களில் 24 சதவீதம் குறுங்கால முதலீடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. இதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் முகாமைத்துவம் சிறந்த மட்டத்தில் காணப்படவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையின் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மீளமைக்கப்பட்ட சக்தி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் இயலளவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொழில்நுட்பம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.தொ) | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.தொ) |
| நீர் மின்சாரம் | 42 | 91.30 | 10 | 37.8 |
| காற்றுச் சக்தி | 04 | 28.40 | 01 | 9.8 |
| நீரின் திணிவு | 10 | 51.00 | 01 | 10.0 |
| சூரிய சக்தி | 01 | 0.12 | - | |
| | 57 | 170.82 | 12 | 57.6 |

(ஆ) ஆணைக்குழுவால் மின் உற்பத்திக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், அவ்வருடம் முதல் 2013 ஆம் ஆண்டு வரை சிறிய மின் உற்பத்திக்காக 188 மின் உற்பத்தி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த அனுமதிப்பத்திர உடமையாளர்களில் 67 பேர் மின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கவில்லை. அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் பின்னர் அனுமதிப்பத்திர உடமையாளர்களால் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டிய கால எல்லையை குறிப்பாக அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன், அனுமதிப்பத்திர உடமையாளர் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நுகர்வோர் ஆலோசனைக் குழு

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நுகர்வோர் ஆலோசனைக் குழுக் கூட்ட அறிக்கைகளைப் பரிசோதித்த போது 09 மாகாணங்களில் அநேகமான மாகாணங்களில் நுகர்வோர் ஆலோசனைக் குழுக்களுக்கு சில மாதங்களில் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்ததுடன், வடமேல் மாகாணத்திற்காக மீளாய்வாண்டிற்காக உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அத்தோடு மீளாய்வாண்டில் நுகர்வோர் ஆலோசனைக் குழுவிற்காக ரூபா 905,030 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அக்குழுக்களை அமைத்ததால் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டதா எனக் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதுள்ளது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஏப்ரல் மாதத்தின் தென் ஆசியா உட்கட்டமைப்பு வசதிகள் ஒழுங்குபடுத்தல் அமைப்பின் மூலம் பங்காளதேசில் இடம்பெற்ற மாநாடொன்றில் பங்குபற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 55,000 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகை வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் பகிரங்க அறிவித்தல் மூலம் போட்டி விலை கோரல் மேற்கொள்ளாமல் மூன்று நிறுவனங்களிலிருந்து மாத்திரம் விலை கோரல் கோரி சில வருடங்களாக ஒரு தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. வருடாந்தம் விலை திருத்தங்களைச் செய்து அந்நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தங்களில் இரு தரப்பினரும் மேற்கொண்டமையால் போட்டி மூலம் நிறுவனத்திற்கு சாதகமான வகையில் வாடகை சேவையொன்றை பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்காக மாத்திரம் ரூபா 479,538 தொகை வாகன வாடகையாக அந்நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012/2013 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆணைக்குழுவின் வாகனத்திற்கு அரை சொகுசு வரி செலுத்த தாமதமாகியமையால் ரூபா 12,500 தொகையான தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 45 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 41 ஆகவும் இருந்ததுடன், வெற்றிடங்களாக இருந்த பதவியணியினர் எண்ணிக்கை 4 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போதும் சம்பளம் தீர்மானிக்கும் போதும் 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிறுவகங்களில் சம்பளம் மற்றும் படிகள் என்பவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளை தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி அதன் பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் ஆணைக்குழு அதற்கு முரணாக 2013 ஆம் ஆண்டில் மூன்று உத்தியோகத்தர்களை சேர்த்து 2013 ஒக்தோபர் முதல் அமுலாகும் வகையில் புதிய சம்பள திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு அறிக்கை மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றிற்கு இடையே கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் இருந்தமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2010 ஒக்தோபர் 17 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்திலும் 2012 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்திலும், 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அக்கட்டளைகளை இதுவரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வெளிநாட்டு பிரயாணம்

(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டண அறவீடும்